

தாயுமானவரின் சமரச நெறி
மன்னார்குடி பானுகுமார்
ராஜம் பதிப்பகம்

# தாயுமானவரின் சமரச நெறி

தாயுமானவர் - தாயும் ஆனார் என்ற இரு நிலைகளிலும் அழைக்கப்படுகின்றார்.

தாயைப் போன்றவர், தாயாக ஆனவர் என்ற இரு பொருளிலும் இதனை அமைக்கலாம்.



திருச்சி மலைக் கோட்டையில் கோயில் கொண்டிருக்கும் இறைவன் பெயரை இவருக்கு இயற்பெயராகப் பெற்றோர் அமைந்தததாக் கூறுவர்.

இறைநிலை அல்லது வெட்டவெளி, அல்லது சுத்தவெளி, அல்லது இறையாற்றல், உலக உயிர் அனைத்திற்கும் தாயாகத், தாய் போன்ற நிலையில் அமைகின்றது.

அந்நிலையில் இவைனைத் தாயும் ஆனார் எனக் கூறல் இயைபுறுகின்றது.

அதோடு திருச்சிராப்பள்ளியில், காவிரித் தென்கரையில் இருந்த ஒரு தாய், வெள்ளப் பெருக்கின் காரணமாக,

வடகரையிலிருந்து தன் மகளுக்கு மகப்பேறு பார்க்கச் செல்லவியலாது வருந்தவே, இறைவனே அத்தாயாகச் சென்று மகப்பேறு பார்த்தமையால் "தாயும் ஆனார்" எனக் கூறுவர்.

எந்த உயிரும் முதலில் அறிவது தாயைத்தான். அதனால் தாய்க்கு எல்லா நிலைகளிலும் முதலிடம் தருகின்றறோம்.

"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்பது பழமொழி. தாய்மொழி, தாய்நாடு போன்ற அமைப்புகளும் அதனால் அமைந்தன என்பது நினைத்தற்கரியது.

மாதா,பிதா, குரு, தெய்வம் என தாய்க்கு முதலிடம் கொடுக்கும் சொற்றோடரையும் எண்ணிப் பார்க்கலாம். உறவு முறைப் பெயரால் அமைந்த சிறந்த அடிகள் தாயுமானவரே.

அது பெற்றோரிட்ட பெயராகவும், என்றும் வழங்கும் பெயராகவும் நிலைத்தமையும் எண்ணத்தக்கது.

- பெயர் = தாயுமானவர்
- பெயர் காரணம் = திருச்சி மலைமீது உள்ள இறைவனான தாயுமானவர் அருளால் பிறந்தமையால் இவருக்கு தாயுமானவர் என்று பெயர் சூட்டப்பட்டது.
- பெற்றோர் = கேடிலியப்பர் – கெசவல்லி அம்மையார்
- மனைவி = மத்துவார்குழலி
- மகன் = கனகசபாபதி
- தந்தையின் ஊர் = நாகபட்டினம் மாவட்டத்தில் உள்ள திருமறைக்காடு(வேதாரண்யம்)
- தாயுமானவர் பிறந்த ஊர் திருச்சிராப்பள்ளி
- பணி = திருச்சியை ஆண்ட விஜய ரகுநாத சொக்கலிங்கரிடம் கருவூல அலுவலர்-மந்திரி

- காலம் = கி.பி. 18ம் நூற்றாண்டு

## தாயுமானவரின் பாடல்கள்.

இவரது 4127 வரிகள் கொண்ட 1452 பாடல்கள் 56 தலைப்பில் பகுக்கப்பட்டுள்ளன. இவரது பாடல்களை தமிழ்மொழியின் உபநிடதம் என்று அழைப்பார்கள். தமிழ் சமய கவிதையின் தூண் என்றும் அழைப்பார்கள்.

தமிழ் அறிந்தவர்களில் தாயுமானவரை அறியாதவர்கள் ஒருவரும் இருக்க மாட்டார்கள்.

தாயுமானவரின் பாடல்களைப் படித்தால் உள்ளம் இளகும். உயிர் உருகும். கரும்புச் சாற்றில் தேன் கலந்து, பால் கலந்து, கனியின் சுவை கலந்து இனிக்கும் தாயுமானவரின் பாடல்கள் உயிரில் கலந்து உவகை தரும்.



இராமநாதபுரம் தாயுமானவர் ஆலயத்தில் ஆசிரியர்

“தாயுமானவரின் பாடல்களுக்கு உருகாதார் ஒரு பாடல்களுக்கு உருகார்” என்ற தொடர் பாடல்களின் கனிவுத் தன்மையைப் புலப்படுத்தும். ‘எலும்பை உருக்கும் பாட்டு’

தாயுமானவரது பாடல்களைப் பாடி இறைவனிடத்தே அன்பு செய்தமால் அருள் பெற்று உண்ணலாம் என்பதில் ஐயமில்லை.

தாயுமானவரின் ஆன்மீகம் என்பது அறிதலின் சிக்கல்களுக்குள் புகுந்து துழாவும் தத்துவங்களுக்குள் மட்டும் அடங்கி விடுவதல்ல, வாழ்க்கையின் போராட்டங்களை நேரடியாக நடைமுறையில் எதிர்கொள்வது.

பக்தியும் ஞானமும் நிரம்பி வழிவன பக்தி ஞானம் என்ற இரண்டு துறைகளிலும் இருப்பவர்கள், தாயுமானவரது பாடல்களை உணர்ச்சி பெருக ஓதி உள்ளம் உருகி நிற்பார்கள்.

தாயுமானவரைப் போன்ற ஞானி ஒருவர் இங்கிலாந்திலே இருந்திருப்பாரானால் அவரைப் பற்றி அறியாத பாடசாலை மாணாக்கன் எந்த இடத்திலும் இருக்க மாட்டான்.

அவரது இனிய இசை நிரம்பிய அமிர்த கவிகளைக் கற்றேனும், அவரது சரித்திரம் முதலியவற்றைக் கேட்டேனும் அறியாத ஆயிரக் கணக்கான மூடர்கள் தம்மைக் கல்விமான்களென்றும், பட்டதாரிகளென்றும் கூறிக்கொண்டு இந்நாட்டிலே திரிகின்றார்கள். சொன்னவர் பாரதியார்.



இராமநாதபுரம் தாயுமானவர் ஆலயம்

தாயுமானவர் பாடல்கள் ஆன்மீக சாதகனுக்கு ஒரு நல்ல வழிகாட்டி.

தாயுமானவரது பாடல்கள் நமது வாழ்க்கைக்கு நமது ஆன்மீகப் பயணத்திற்குவழிகாட்டும் படிகற்களாகும். அவரது பாடல்கள் ஞானப் பொக்கிஷமாகும். ஞானப்பட்டறை ஆகும்.

இறைவன் மீது இடையறாது எல்லையற்ற அன்பினைச் செலுத்தினால், இறைவன் தவறாது திருவருள் புரிவான் என்பது தாயுமானவரது அனுபவமாகும்.

மூடுமந்திர மூனகல்களையும் , அரூப அலறல்களையும் கவிதையாக்காமல் பளிச்சென்று தெரியும் வெட்டவெளி உண்மைகளை ஓரிரு வரிகளில் செதுக்கி எடுத்து, தாயுமானவர் கவிதைகளாகக் கொடுத்திருக்கிறார்.

மொழி வளம், கற்பனை நயம், சமூகப் பார்வை, பிரக்ஞையுடன் கூடிய சீற்றம் எல்லாம் இணைந்து-இணக்கமாகி, தாயுமானவரை ஓர் இணையற்ற கவிஞராக ஆக்கியிருக்கின்றன!

வித்துவ வல்லமையும், கருத்துத் தெளிவும் நம்பிக்கை தரும் அளவிற்குத் தாயுமானவர் பாடல்களில் விரவியுள்ளன.

பிற மகான்களுக்கு எளிதில் எட்டாத அந்த அதீதச் சிறப்பு மிக்க மனிதாபிமானமும், தொலை நோக்கும், சமுதாய மேம்பாட்டுச் சிந்தனைகளும் தாயுமானவருக்கான வரங்கள்!.

“கடையனுக்கும் கடைத்தேற்றம் வேண்டும்” என்னும் இடையறாத தாகம், தாயுமானவரது பாடல் வரிகளின் நடை வேகம்.

துருப்பிடித்த வாத்தைகளைத் தூரத் தள்ளி, சுறுசுறுப்புச் சொற்களுக்குச் சூடேற்றியவர் தாயுமானவர் !

தாயுமானவருடைய கவிதை வரிகள் -வீரியம் மிக்க சூரிய விதைகள்! இருளை வேரறுக்கிற வெளிச்ச விழுதுகள்!

தாயுமானவர் கவிதைகள், சொற்களில் வடித்த சுடுசோறு…சமுதாயம் பசியாறும்.

“தாயுமானவனே நீ ஒரு அற்புதம் - நீ அனைவரும் படிக்கும் புத்தகம்!

தாயுமானவனே நீஒரு கனிமரம் - உன் ஆற்றலில் நிமிர்ந்தது மானுடம்.”

“எண்ணறிவில் எழுத்தறிவில் நுண்ணறிவில் நூலறிவில் விண்ணளவு உயர்ந்து நின்று விஸ்வரூம் காட்டியவர்!” தாயுமானவர்.

“கற்றுத் தேர்ந்த செந்தமிழும் கவனம் பதிந்த வடமொழியும் உற்ற இரட்டை மொழியாக தாயுமானவர் நாக்கில் வரும்போது, தெற்குக் காவிரி ஊற்றெடுக்கும். தேம்சு நதிக்கரைக் காற்றடிக்கும்!”

தாயுமானவர் பாடல்களின் தத்துவச் செழுமையும், வாழ்க்கை நோக்கும், கவித்துவமும் பாரதியாரை முழுமையாக ஆட்கொண்டன.

தமிழ்ச் சிந்தனை மரபில் இத்தகைய உயர் இடத்தை அவருக்கு பாரதி அளித்திருப்பதற்கு இதுவே காரணம்.




அரசியல் செயல்பாட்டாளர், வேதாந்தி என்று பல முனைகளிலும் கொந்தளித்துக் கொண்டிருந்த பாரதியார் உள்ளத்திற்குத் தாயுமானவரின் வாழ்க்கையும், அவரது பாடல்கள் பேசும் தத்துவங்களும், தெளிவையும் வழிகாட்டுதலையும் தந்திருக்கக்கூடும்.

## தாயுமானவர் வேதாந்தியா? சித்தாந்தியா?

வேதாந்தத்தையும் சித்தாந்தத்தையும் தாயுமானவர் தம் பாடல்களில் வெளிப்படுத்துபோது, தகிக்கும் உணர்வுத்தணல் வார்த்தைகளை வெதுப்புகின்றன.

அடிகள் பாடலைச் சிலர் “பக்தி வெள்ளம்” எனப் மகிழ்வர். சிலர் வேதாத்ந்தம் எனப் புகழ்வர். சிலர் “சித்தாந்தம்” எனப் போற்றிப் பயன் கொள்வர்.

சிலர் வேதாந்த சித்தாந்த சமரச நெறி எனக் கொண்டாடுவர். எனவே தாயுமாவரது நெறி பற்றி நாம் தெரிந்து கொள்வது அவசியமாகிறது.

“வேதாந்தம் சித்தாந்தம் வேறென்னார் கண்களிக்கும்

நாதந்தமோன நலமே! பராபரமே”

## எது சமரசம்?

சந்தத்தால் மட்டும் மக்களைக் கவரும் சொற்கள் சில உண்டு. அவற்றின் உண்மையான பொருள் என்ன என்பது பற்றிச் சிறிதும் சிந்தனை இல்லாமலேயே மக்கள் அச்சொற்களில் ஈடுபட்டு வருகின்றனர். அத்தகைய சொற்களில் “சமரசம்” என்பதும் ஒன்று.

சமரசம்” என்றால் அனைத்துப் பொருள்களையும் ஒரேவகையாக வேறுபாடின்றி அதாவது உயர்வு தாழ்வு பாராட்டாமல் எல்லாவற்றையும் எடுத்துக் கொள்வது எனப் பொதுவாக மக்கள் நினைக்கிறார்கள்.

சமரசம் என்பதன் பொருள் இதுவா? எனச் சிந்திக்க வேண்டும்.

“விலங்கொடு மக்கள் அனையர்” என்றும்
“பொன்னொடு இரும்பனையர்” என்றும்
“வேம்பினோடு தீங்கரும்பு விரவி” என்றும்

மற்றும் இவ்வாறு சொல்லப்படுவன பலவும் பொருள்களின் தரம் அறிந்து அவற்றைக் கொள்ளல் வேண்டும் என்பதையே வலியுறுத்தி நிற்கின்றன.

அவற்றிற்கு மாறாக விளங்கும் "மக்களும் ஒரு தன்மையரே" என்றும் "பொன்னும் இரும்பும் ஒரு தரத்தனவே"- என்றும் "வேம்பும் கரும்பும் ஒரே சுவையுடையன" என்றும் கூறுபவரோ அல்லது கொள்பவர் ஒருவரும் இலர்.

ஆனால், மக்களும் - பொன்னும் - கரும்புந்தான் - உலகத்தில் இருத்தல் வேண்டும். மற்றைய விலங்கு ,இரும்பு, வேம்பு இவை உலகத்தில் இருத்தல் கூடாது என்பதும் இல்லை.

"சிறு துரும்பும் பல்குத்த உதவும்" என்பது போல எல்லாப் பொருளும் தேவைதான்.

ஆனால் தேவையே பொருளின் தரத்தை மாற்றி விடாது என்பதைச் சமரசம் பேசுகின்றவர்கள் நினைவில் வைக்க வேண்டும்.

சமரசம் என்பது தாயுமானவர் படல்களில் ஆங்காங்கு பரவலாகவே காணப்படுகிறது.

சமய நெறியில் சமரசத்தை முதற்கண் காட்டியவர் தாயுமானவரே. ஆயினும் அவரது சமரசம் சிந்தனைக்கு வேலைதரும் ஒரு சமரசம் ஆகும்.

## உண்மைச் சமரசம்.

சமரசம் ஒரு நல்ல பண்பே. ஆனால் அதற்குத் தவறான பொருள் கொள்ளக் கூடது.

ஒரு குடும்பத் தலைவனுக்குக் குடும்பத்தில் உள்ள எல்லோரையும் சமமாகப் பாவிக்கும் பண்பு தேவைதான்.


ஆனால் தந்தை மகன், அண்ணன், தம்பி, தாய், மனைவி, தமக்கை, தங்கை என்ற எல்லாரிடத்திலும் ஒரே வகையாக அவன் இருத்தல் வேண்டும் என்ற எதிர் பார்க்க முடியாது.

அதுபோலத்தான் எல்லாப் பொருளிலும் கொள்ள வேண்டும். அதாவது எந்தப் பொருளிலும் காய்தல் உவத்தல் கொண்டு அதன் தரத்தைக் குறைத்தோ அல்லது உயர்த்தியோ மதித்தல் கூடாது.

அதனதன் தரத்திற்குரிய மதிப்பை அவற்றிற்குத் தரப்பட வேண்டும்.

அதோடு எந்தப் பொருளையும் தனது விருப்பு வெறுப்பினால் அழிக்கவோ ஆக்கவோ கூடாது. அதனதன் தரத்தில் அதையதை வாழவிட வேண்டும். இதுதான் உண்மைச் சமரசம்.



## தாயுமானவரது நெறியும் சித்தாந்த நெறியே

திருவள்ளுவர் பொதுவாகப் பலர் நினைக்கின்ற சமரசத்தை பொது என்றும் உண்மைச் சமரசத்தை “வரிசை நோக்கு” என்றும் வைத்து, அரசனுக்கு பொதுநோக்கு மட்டும் இருந்து வரிசை நோக்கு இல்லாவிடின் அவன் நாட்டில்உயர்ந்தோரும் நல்லோரும் திறமைமிக்கவர்களும் இருக்க மாட்டார் என்றும் வரிசை நோக்கு இருந்தால் எல்லாரும் அவனைச் சேர்ந்து வாழ்வர். ஒருவரும் அவனை விட்டு நீங்க மாட்டார் என்று கூறுகின்றார்.

“பொது நோக்கான் வேந்தன் வரிசயைா நோக்கின்

அது நோக்கி வாழ்வார் பலர்”

என்பது குறள் இக்குளின் கருத்தைப் புலவர் ஒருவர்.

“தராதரம் அறிந்து முறை செய்யாத மன்னரைச்

சார்ந்தென்ன நீங்கில் என்ன”

என்று எளிய நடையில் கூறினார்.

இம்முறை எல்லாவற்றிலும் வேண்டுவதாயினும் மிகஉயர்ந்த பயனாகிய ஆன்மிக லாபம் தருகின்ற சமயத்துறைக்கு இது மிக மிக இன்றியாமையாதது.

சமயக் காழ்ப்புக் கூடாது. ஆனால் அதனதன் நிலைமைகளை உள்ளவாறு மக்களுக்கு எடுத்துக் காட்டவே வேண்டும்.

"சமரசம்" "சமரசம்" என்று பல இடங்களில் கூறுகின்ற தாயுமானவர், இவ்வாறு சமயத்தின் உண்மைநிலைகளையும் எடுத்துக் காட்டுகின்றார்.

தாயுமானவர் காலத்தில் தமிழ் நாட்டில் மேலோங்கியிருந்த சில சமய வேறுபாடுகள் வேதாந்தம் சித்தாந்தம் சைவம் மற்றும் பிற சமயங்கள் ஆகும்.

ஆனால் தாயுமானவரது நெறி மரபு சித்தாந்த நெறி மரபே என்பது தெளிவாகையால் அவரது நெறியும் சித்தாந்த நெறியே என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.




## வேதாந்த சித்தாந்த சமரசம்.

வேதாந்த சித்தாந்தங்களைப் பற்றி நன்கு உணராமலே தம்மை "வேதாந்திகள் என்றும் "சித்தாந்திகள்" என்றும் சொல்லிக் கொண்ட பலர் "வேதாந்தமாவது ஏகான்ம வாதமே" என்றும் "அத்துவிதம்" என்பது "கேவலாத்துவிதம்" என்றும் "சித்தாந்தமாவது துவைதமே" என்றும் கொண்டு இருந்தனர்.

அவற்றுள் வேதாந்திகள் என்போர் சித்தாந்தம் ஒரு பக்தி நெறியே. அதில் அத்துவித ஞானம் இல்லை என்றும் “சித்தாந்திகள் என்போர் வேதாந்தம் மாயா வாதமாய் இம்மை மறுமை நலங்களைத் தாராததோடு ஆன்ம லாபமாகிய மோட்ச்தையும் தர மாட்டாது எனவும் பலவாறாக தம்முள் மாறுபட்டு வாதங்கள் பல செய்து வந்தனர்.

இதற்கு முடிவாகத் தாயுமானவர், வேதாந்தம் சித்தாந்தம் இரண்டும் பொருளால் ஒன்றே என்கிறார்.

அதைக் கூறும் முறைதான் வேறு. உண்மையை வேதாந்தம் பொதுவாகச் சுட்டுகிறது என்கிறார்.

சித்தாந்தம் அதனைச் சிறப்பாக விளக்குகிறது. இதனை அறிந்தவரே உண்மை வேதாதந்திகளும் உண்மைச் சித்தாந்திகளும் ஆவார். அவர் தமக்குள் முரண்பட்டு நில்லார் என்கிறார்.

எனவே வேதாந்த, சித்தாந்த சமரசம் காண்பவரது நிலையே நன்னிலையகும் என தாயுமானவர் விளக்கி வந்தார்.


“வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற


வித்தகச் சித்தர் கணமே”

“.....வேதாந்த சித்தாந்த

சமரச சிவானுபூதி என்ன”

என்பன போன்ற வரிகள் நினைவில் கொள்ளத்தக்கன.




## அனைத்துச் சமயங்களும் ஒன்றே.

சித்தாந்தத்தை துவிதமே என்று கொண்ட அந்த வேதாந்திகளில் சிலர் பொதுவாக சித்தாந்தத்தைப் புறக்கணித்ததோடு அதில் சொல்லப்பட்ட சரியை முதலிய பல நெறிகளையும் புறக்கணித்து ஒதுக்கவராராயினர்.

இது தாயுமானவர்க்குப் பெரிதும் வருத்தத்தை அளித்திருக்கிறது.

துவைதத்திலிருந்துதான் அத்வைதத்திற்குச் செல்ல வேண்டும் என்பது எல்லோர்க்கும் ஒத்த முடிபு.

இதைவேறொரு கருத்தில் வேதாந்திகளும் சொல்லளவில் உடன்பட்டு வந்தனர்" என்பார் சண்முக தேசிக ஞான சம்பந்த சுவாமிகள்.

அதனால் தாயுமானவர், எத்தகையோரும் சரியையாதி தவங்களைப் புறக்கணிக்காது கைக் கொள்ள வேண்டும்...என்று இரு சாராருக்கும் பொதுபட, சமரச நிலையில் விளக்குகின்றார். அவைகளில்

வேதமுடன் ஆகம புராணமிதி காசமுதல்
 வேறுமுள கலைகளெல்லாம்

மிக்காக அத்துவித துவித மார்க்கத்தையே
விரிவா யெடுத்துரைக்கும்

ஓதரிய துவிதமே அத்துவித ஞானத்தை
உண்டுபணு ஞானமாகும்
ஊகம்அனு பவவசன மூன்றுக்கும் ஒவ்வுமீ
துலகவா திகள்சம்மதம்

ஆதலி னெனக்கினிச் சரியையா திகள்போதும்
யாதொன்று பாவிக்கநான்
அதுவாதலா லுன்னை நானென்று பாவிக்கின்
அத்துவித மார்க்கமுறலாம்

ஏதுபா வித்திடினும் அதுவாகி வந்தருள்செய்
எந்தைநீ குறையுமுண்டோ
இகபர மிரண்டினிலும் உயிரினுக் குயிராகி
எங்குநிறை கின்றபொருளே. (நிறைகின்ற பொருள் 3)

பஞ்சசுத்தி செய்து நின்னைப் பாவித்துப் பூசை செய்தால்

விஞ்சிய ஞானம் விளங்கும் பராபரமே"

"விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்

"அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ பராபரமே"

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொங்கினர்க்கோர்

வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே”

என்பன போன்றவற்றால் அடிகள் தவநெறியைப் பலர்க்கும் வலியுறுத்தினார்.

“சைவம் முதலாம் அளவில் சமயமும் வகுத்து மேல்

சமயம் கடந்த மோன

சமசரம் வகத்த நீ உண்னை நான் அணுகவந்

தண்ணருள் வகுக்க இலையோ?

என்னும் பாடல் வரிகளால் அனைத்து சமயங்களும் உயிர்கள் பக்குவ பேதம் நோக்கி இறைவனால் வகுக்கப்பட்டவை என்பதே அடிகள் கருத்து என்பது நன்கு விளங்கும். ஆதலால் அவரது சமரச நெறியின் தன்மையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

தாயுமானவர் “அகவலில்” விளியாக இறைத் தன்மைகள் அனைத்தையும் கூறுகின்றார்.

“திருவருள் ஞானம் சிறந்துஅருள் கொழிக்கும்

குருவடிவு ஆன குறைவுஇலா நிறைவே

நின்ற ஒன்றே நிர்மல வடிவே

குன்றாப் பொருளே குணப்பெருங் கடலே

ஆதியும் அந்தமும் ஆனந்த மயம் ஆய்

சோதியே சத்தே தொலைவில முதலே (அகவல்.1-6)

இறைவனைப் பொதுமைத் தொடர்கள் பயன்படுத்தி அழைக்கின்றமையே தாயுமானவர் பாடலில் மிகுதியாக அமைந்துள்ளன.

அந்த நிலையே தாயுமானவரை ஒரு சர்வசமய சமரச வாதி என்பதை உறுதிப்படுத்துகின்றது.

